


தும்பல் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை.

திரு :ர ராமசாமி

ந.க.எண்.01/2024 நாள்.07-06-2024

பொருள் மனைப்பிரிவு – பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் - தும்பல் ஊராட்சி மற்றும் கிராமம் - ஊராட்சி – ச.எண்.108/3 பி யில் அமைந்துள்ள 2.44 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி உத்தரவு வரப்பெற்றது – மனைகளை விற்பதற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை

01. சேலம் நகர ஊரமைப்பு துறை இயக்ககம் அவர்களின் உத்தரவு கடிதம் ந.க.எண.13788/2023/சேம-3, நாள்.20.09.2023
02. திரு.எம். பரித் அகமத் த/பெ s a.மொய்தீன், என்பவரின் மனு நாள்.20.05.2024
03. மனைப்பிரிவு உரிமையாளர் கிராம ஊராட்சிக்கு வளர்ச்சி கட்டணம் செலுத்திய நாள்.22.05.2024

/0/0/0/0/0/

பார்வை-1ல் காணும் துணை இயக்குநர் நகர் ஊரமைப்புதுறை, சேலம் அவர்களின் உத்தரவில் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய எல்லைக்குட்பட்ட தும்பல் கிராம ஊராட்சியில்ச.எண்.108/3 பி யில்அமைந்துள்ளமனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை-2ல் காணும் திரு. எம். பரித் அகமத் த/பெ s a.மொய்தீன் என்பவர் மேற்படி சர்வேஎண் கொண்ட மனைப்பிரிவிற்கு மனைகளை விற்பதற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறு கடிதம் அளித்துள்ளார். மேலும் பார்வை 3ல் காணும் விவரப்படி ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய 3% வளர்ச்சி கட்டணம் ரூ.36600/- (ரூபாய் முப்பத்தாறாயிரத்து அறுநூறு மட்டும்) செலுத்தியுள்ளார்.

எனவே மேற்காணும் சர்வே எண். 108/3 பி கொண்ட மனைப்பிரிவிற்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தனிமனைகளாக விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

வ.எண் **நிபந்தனைகள்**

1. இந்த உத்தரவானது மனைப்பிரிவினை விற்பனை செய்வதற்கு மட்டுமே ஆகும், குடியிருப்பு கட்டிடங்களை கட்டுவதற்கு கிராம ஊராட்சியின் நீல வரைபட கட்டிட உரிமம் பெறப்பட்ட பின்னரே குடியிருப்பு கட்டிடங்களை கட்டப்பட வேண்டும்.
2. மனையின் அளவு எவ்வளவோ அந்த இடத்தினை மட்டுமே குடியிருப்புகளுக்கான வீட்டினை கட்டப்பட வேண்டும். எக்காரணம்கொண்டும் கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய மற்றும் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் வீதிகளை ஆக்கிரமிப்பு செய்து வீடுகளை கட்டகூடாது.
3. இந்த உத்தரவானது குடியிருப்பு வீடுகளை கட்டுவதற்கு மட்டுமே செல்லத்தக்கதாகும், தொழிற்நிறுவனங்களை தொடங்குவதற்கு இந்த உத்தரவு செல்லாது.
4. மனையின் குறுக்கே மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் இருப்பின் அதனை சம்மந்தப்பட்ட மின்வாரியத்திற்கு தெரிவித்து அகற்றிய பின்னரே குடியிருப்பு கட்டிடங்களை கட்டப்பட வேண்டும்.
5. தற்போது செலுத்தப்பட்டுள்ள வளர்ச்சி கட்டணம் குறைவு எனத் தெரிவிக்கப்பட்டால் நிலுவைத் தொகையை உடனே செலுத்த வேண்டும்.

6. ஊராட்சிக்கு சொந்தமான நிலத்திலும், தெருவிலும், அரசுக்கு சொந்தமான இடத்திலும், சாலைகளிலும், பொது இடங்களிலும் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது.

7. கட்டிடம் கட்டுமிடத்தில் உரிமை சம்பந்தமான வில்லங்கங்களுக்கு ஊராட்சி பொறுப்பல்ல.

8. மேற்காணும் உத்தரவு நகர ஊரமைப்புத் துறை உத்தரவிற்கு உட்பட்டதாகும். நகர ஊரமைப்புத் துறையினரால் ஏதேனும் மாறுதல் செய்ய தெரிவித்தால் மாறுதல் செய்ய வேண்டும்.

9. "வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்" என்ற திட்டத்தில் கீழ் குறைந்தபட்சம் ஒரு மரம் வளர்க்க வேண்டும்.

நாமசிவ

ஊராட்சி மன்ற தலைவர்

தும்பல் ஊராட்சி,
பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரம்.

பெறுதல்

திரு.எம். பரித் அகமத் த/பெ s a.மொய்தீன் 46/ பி மேட்டுக்கான் தெரு,
சேலம்-1